அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 10 நெறி 2 தமிழ் மாத இதழ் விலை ₹1 செப்டம்பர் 2019

பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!

அக்டோபர் 5
வள்ளல்பெருமான்
வருவிக்கவுற்ற பெருநாள்

## ஆன்மநேய ஒருமைப்பாட்டு தினம்



எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!



தருமமும்...

## தலை வணங்குகிறோம்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நித்ய தீப தருமச்சாலை கட்டிட அருட்பணிக்கு ₹.50,000/- பொற்காசுகளைஅள்ளி குவித்த சன்மார்க்க உலகின் மூத்த சான்றோர், ஆன்மநேய ஈரநெஞ்சினர் **மு. பாலசுப்ரமணியம்** தம்பதியினரை தீபம் அறக்கட்டளை உளமாற நெகிழ்ந்து அவர்தம் தருமத்திற்கு தலை வணங்குகிறது.

## தெய்வத்தாயை வணங்குகிறோம்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகளுக்கு மாதந்தோறும் தள்ளாத வயதிலும், தளராத உள்ளத்துடன் ₹.1,000/- பொற்காசுகளை அளித்துவரும் தயவுமிகு **லட்சுமி அம்மாள்** அவர்களின் தொண்டிற்கும், தருமத்திற்கும் தீபம் தலை வணங்குகிறது.



தொண்டும்...


## “ தீபநெறி ” ஆசிரியர் குழு



**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**பொதிகைபிரியன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கள்ளக்குறிச்சி
கைபேசி : 97897 88198



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 97894 94009

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கு உணவு தயாரித்த ஆடுகின்ற சேவடிகள்.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் ஆயிரக்கணக்கான அன்பர்கள் பசியாறும் காட்சி

**சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்**
**விராவி யுள்விளங்கும் வித்தக மணியே (1304)**

# 05.10.2019 ஆன்மநேய ஒருமைப்பாட்டு தினம்

'எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப, விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும்.' இது இறைவனுக்கு வள்ளலார் விடுத்த விண்ணப்பம்.

விண்ணப்பம் என்பது பணிவான வேண்டுகோள். எனவே "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்ற ஒரு குறிக்கோளை மட்டுமே செயலாக்க முனைந்த வள்ளலார், இந்த அப்பட்டமான உண்மையை, எவரும் எழுதத் துணியாததை எழுதுகிறார். மனித உயிர்கள் எதனாலெல்லாம் துன்புறுகின்றன என்று பார்த்தால் பசி, பட்டினி, நோய், அறியாமை, பஞ்சம், வெள்ளம், இயற்கையின் சீற்றம், கொடுங்கோலாட்சி, நாடுகட்கிடையிலான போர், கொலை, கொள்ளை. ஏமாற்றம், அற்ப சுகத்துக்கு அடிமையாதல் போன்றவை நமக்குத் தெரிகின்ற காரணங்கள். ஆனால் வள்ளலார் இவைகள் எதுவுமே முதற் காரணமல்ல. சமய, மத, மார்க்க, வருணாசிரமங்களை ஆணித்தரமாக்க முனைந்த உலகாசார சங்கற்ப விகற்பங்களே முக்கிய தடையென்கிறாரே! இதை எப்படி ஏற்பது?

வருணம் (வர்ணம்) என்பது அறவோர், அரசர், வணிகர், வேளாளர் என மனித இனம் நான்காக பிரிக்கப்பட்டது. (பிற மதங்களிலும் இதற்கு இணையான பெயரில் பிரிக்கப்பட்டிருக்கிறது). ஆசிரமம் என்பது குருமார்களின் இருப்பிடம், அவர்களின் வழிகாட்டுதலில் நடத்தப்படுதல். ஆசாரம் என்பது – அனுட்டானம். ஒழுக்கம், நெறி, சங்கற்பம் என்பது – மனோ நிச்சயம். நியமம், எண்ணம், மனோ கற்பனை. விகற்பம் என்பது வேற்றுமை, தவறு, ஐயம், வித்தியாசப்படுத்துதல்.

மனித இனம் நால்வகை வருணமாக உலகர்களால்தான் (பிரிக்கப்பட்டது) விகற்பமானது. இது நம்மைப் படைத்த இறைவனுக்கு ஏற்புடையதல்ல. எனவேதான் இன்றைய உலக சமாதானத்திற்கு ஊறு செய்ய இது காரணமாகிவிட்டது. இறைவன் படைப்பில் கூட உடலிலுள்ள கால்கள் ஓடியாடி உழைத்து மனித இனத்திற்கு உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைத் தர உறுதுணை நிற்கிறது. (இது வேளாண்மை). வயிற்றுப் பகுதி உடலுக்குத் தேவையான உணவை (வாய் வழியாக) கொள்முதல் செய்து ஜீரண உறுப்புகள் மூலம் உதரமாக்கி உடல் முழுவதற்கும் விநியோகம் செய்கிறது. (இது வணிகம்). மார்புப் பகுதியில் உள்ள இருதயம், நுரையீரல், இரத்தத்திலுள்ள அழுக்கை நீக்கி (சமுதாயத்தில் குற்றம் நீக்குதல் போல) சுத்தப்படுத்தி உடலில் பரவச் செய்வதுடன், உடலைக் காப்பாற்ற கைகள், எதிரிகளுடன் போரிட அக்காலத்தில் வில்லேந்தவும், இக்காலத்தில் துப்பாக்கி தொங்கவிடவும் தோள்களையும் கொண்டுள்ளது. (அரசர்). கழுத்திற்கு மேலுள்ள பகுதியால் இங்கே உணவு இருக்கிறது அங்கே எதிரி வருகிறான் போன்றவற்றைக் காண கண்கள், பிறரை அழைக்க, கல்வி கற்க, உரையாட, அறிவை வளர்க்க வாயும், செவியும், உறுதுணையாய் நிற்கும். நன்மை, தீமையறிய, அனுபவத்தை சேமிக்க மூளை உண்டு (அறவோர்). இந்த நான்கையும் தனித்தனியாகப் பிரித்து ஒன்றையொன்று தொடாமல் விகற்பமானால் உடலில் உயிர் தரிக்காது. பறந்துவிடும். காலுக்குப் பாய்ந்த உதரம் (இரத்தம்) அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் தலைக்கும் பாய்கிறதே! இதில் எப்படி பேதம் இல்லையோ அதே நிலையை நாம் இதுவரை வருணாசிரமத்தில் நடைமுறைப்படுத்தவில்லை. எல்லா மனிதர்களிடமும் அவர்களை வழிநடத்தும் குருமார்கள் இந்த சாதி மத உட்பிரிவுகளைக் காட்டியே தத்தம் ஆசிரமங்களை தக்கவைத்துக் கொள்கின்றனர். எல்லா மகான்களும் "அன்பாயிரு" என்பதை அடிப்படையாகக் கொண்டே மதங்களை உருவாக்கினர். ஆனால் வழிநடத்துபவர்கள் அதை விகற்பமாக்கிவிட்டனர்.

உலகத்தையும் அதிலுள்ள சுகங்களையும், உன் சந்ததி மற்றும் சுற்றத்தவர் மட்டுமே அனுபவிக்க

**மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்**
**தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே (1306)**

வேண்டும். மற்றவர்கள் கூட அதை இப்போது அனுபவிக்கிறார்கள். அவர்களை ஓரங்கட்டு. ஒதுக்கிடு அல்லது ஒழித்திடு என்பதுதான் இன்றைய வரையில் மனிதனுக்கு வழிகாட்டும் மந்திரமாயிருக்கிறது. சமயவாத போரில் நாலாயிரம் சமணர்கள் கழு ஏற்றப்பட்டனர். பசி, பட்டினி, இயற்கை சீற்றத்தால் மரணமுற்றவர்களின் எண்ணிக்கையை விட சாதிமத வேறுபாடுகளால் அழிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். ஆறு லட்சம் யூதர்களைக் ஹிட்லர் கொன்றதை சரித்திரம் சொல்கிறது. நான்கு லட்சத்திற்கும் மேலான மஞ்சள் இனத்தவரை ஹிரோஷிமா, நாகசாகியில் அடுத்தடுத்த நாளில் அணுகுண்டைப் போட்டு அழித்தது வெள்ளையினத்தினர். பலநாடுகளில் மெத்தப்படித்தவர்கள் ஆட்சி செய்தாலும் இந்த நிலை மாறவேயில்லை.

இதற்கு ஒரு முடிவு காண 24.10.1945-ல் ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organisation – UNO) தோற்றுவிக்கப்பட்டது, அதன் தலைமைப் பொறுப்பில் வெள்ளை, கருப்பு, மஞ்சள் நிறத்தவர் இருந்தனர், இருக்கின்றனர். ஆனாலும் இன்றைய தேதியில் கூட இராக் – இரான் போர், இஸ்ரேல் – பாலஸ்தீனப் போர், வடகொரியா– தென்கொரியா போர், சிரியா – அமெரிக்க போர், பல நாடுகளில் உள்நாட்டில் வாழும் வேறு வேறு சாதி மதத்தவரிடையே போர். இவைகளெல்லாம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனவே தவிர குறைந்தபாடில்லை. ஐ.நா. சபையால் இரும்புக்கரம் கொண்டு அடக்கவோ, பிற நாடுகளின் மூலம் நெருக்கடியைக் கொடுத்தோ போரை முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை. அதன் அதிகாரம் அறுதியிடப்பட்டுள்ளது. எனவே வேறுவிதமாக UNO, UNESCO, WHO, போன்ற அமைப்புகளுடன் சேர்ந்து மனித இனத்திற்கு தொண்டு செய்ய அல்லது அதை மகிழ்விக்க முனைந்தது. உதாரணமாக புகையிலை மறுப்பு தினம், தற்கொலை தடுப்பு தினம் போன்றவற்றை ஆண்டிலுள்ள 365 நாட்களில் ஏதாவது ஒரு நாளில் பிரகடனம் செய்கிறது. Valentine day, Father's day, Senior Citizens day போன்றவைகள் எதை பெரிதாக சாதிக்கப் போகிறது? ஏற்கனவே தனிமனிதர்கள் இவைகளை கொண்டாடிக் கொண்டுதான் இருக்கின்றனர். ஒட்டுமொத்த மனிதஇனம் (எல்லா உயிர்களும்) இன்புற்று வாழ ஒரே வழி மனிதரிடையே ஆன்மநேயத்தை விதைத்து வளர்ப்பதுதான். எல்லாம் அதில் அடங்கிவிடும். உதாரணமாக, புகைபிடிப்பவரிடம் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ அறிவுறுத்தப்படும் போது அதில் புகை பிடிக்கும் அந்த உயிரும் சேர்ந்துதான் அப்போது அவரும் அவரின் உயிரை நேசித்து அதை தன் உடலில் இருந்து பறந்துவிடாமல் நிறுத்தி உடலுடன் நீண்டகாலம் உறவாட வைக்கமுடியும். பிறகு பிற ஆன்மாக்களையும் நேசிக்கும் எண்ணமும் உருவாகி அதுவும் என்னைப் போன்றது தானே என்ற எண்ணத்தை விதைத்து வளர்க்க "ஆன்மநேய ஒருமைப்பாட்டு தினம்" "UNIVERSAL BROTHERHOOD AND COMPASSION DAY" என்பதை பிரகடனம் செய்ய வேண்டும். அதை எந்த நாளில் செய்யலாம்?

திருவருட்பிரகாச வள்ளலாரெனும் இராமலிங்கப் பெருமானார் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ தடையாயிருப்பது சாதி, சமயத்தினால் ஏற்பட்ட விகற்பத்தால்தான் – இது எங்கள் மனதில் பற்றக்கூடாது என்ற ஒன்றை மட்டுமே விண்ணப்பித்து கேட்டாரே (உணவு, உடை, இறந்த பின்பு சொர்க்கம் கொடு போன்றவற்றை கேட்கவில்லையே). அவரின் பிறந்த நாள் **அக்டோபர் 5**. அந்த நாளே ஆன்மநேய ஒருமைப்பாட்டு நாள். அதில் இன்னொரு விளக்கத்தையும் உலகர் பெறுவர். உலகில் இதுவரை வாழ்ந்த எல்லோருக்கும் பிறந்த நாள், மறைந்த நாள், என இரண்டு நாள் வரும். ஆனால் வள்ளலாருக்கு பிறந்த நாள் மட்டுமே வரும். இன்னொரு நாள் எப்போதும் வராது. இதை அப்போதைய தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் G.H. கார்ஸ்டின் தெளிவாக கெசட்டில் பதிவு செய்திருக்கிறார். Saint Ramalingam Disappeared from this small room of Mettukuppam and proved His claim of Deathlessness. எனவே எதிர் வரும் அக்டோபர் ஐந்து முதல் ஆண்டுதோறும் இது "ஆன்ம நேய ஒருமைப்பாட்டு தினமாக" அழைக்கப்படவேண்டும். UNO-வும் இதற்கு ஆவன செய்யட்டும். Let all Humans hail "UNIVERSAL BROTHERHOOD AND COMPASSION DAY".



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

**தாழ்வெலாம் தவிர்த்துச் சகமிசை அழியா**
**வாழ்வெனக் களித்த வளரொளி மணியே (1308)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா





சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவிற்கு வருகை தரும் அன்பர்களுக்கு வழங்குவதற்காக இனிப்புகள் தயாரிக்கப்படும் காட்சி.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா அன்னதானத்திற்காக 65 சிப்பம் அரிசியை உபயமளித்த ஜிதேந்திரா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் திரு. உத்தம் சந்த் ஜெயின் அவர்கள்.

**நவமணி முதலிய நலமெலாம் தருமொரு**
**சிவமணி எனும் அருட்செல்வமா மணியே (1310)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் நடைபெற்ற அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம், ஜோதி வழிபாடு தரிசனம்











**வான் பெறற்கு அரிய வகையெலாம் விரைந்து**
**நான் பெறவளித்த நாத மந்திரமே (1312)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் நடைபெற்ற உலகை கட்டி ஆளும் சன்மார்க்க நீதிக்கொடி உயர்த்துதல்.











**கற்பம் பலபல கழியினும் அழியாப்**
**பொற்புற அளித்த புனித மந்திரமே (1314)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் ஆடுகின்ற சேவடிகளின் அற்புத தொண்டு காட்சிகள்.**













**அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்**
**வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே (1316)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா




தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் கலந்து கொண்ட **பத்மஸ்ரீ விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்** மற்றும் டாக்டர் நவநீதகிருஷ்ணன் ஆகியோர்க்கு தீபத்தின் நினைவு பரிசு வழங்குதல்.



தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் கலந்து கொண்ட **பத்மஸ்ரீ விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்** அவர்களுக்கு தீபத்தின் கல்வி செயலாளர் புஷ்பா பாலகிருஷ்ணன் பொன்னாடை போர்த்திய காட்சி.

**ஐந்தென எட்டென ஆறென நான்கென**
**முந்துறு மறைமுறை மொழியு மந்திரமே (1318)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா



தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் கலந்து கொண்ட டாக்டர் நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு சன்மார்க்கத்தின் மூத்த சான்றோர் மு.பாலசுப்ரமண்யம் அவர்கள் பொன்னாடை போர்த்திய காட்சி.




தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் அருட்பா இசைமாமணி திருக்கோவிலூர் ஜீவ.சீனிவாசன் அவர்களின் குழுவினருடன் அற்புதமாக அமைந்த அருட்பா இசை நிகழ்ச்சி.

**வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்**
**ஓதநின்று உலவாது ஓங்கு மந்திரமே (1320)**

# நித்ய தீப தருமச்சாலை கட்டிட நிதி

**கடந்த 12 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, பல்வேறு தருமச்சாலைகள் மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம்பாலிக்கும் அன்னதருமச்சாலை கட்டிட அருட்பணிக்கு கருணை நிதியை வாரி வழங்குங்கள்**




**இந்த இடம் தீபம் அறக்கட்டளையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இந்த தயவு வெளிக்கும் நமக்கும் இன்னும் 40 லட்ச ரூபாய் இடைவெளி இருக்கிறது.**

**இன்னும் சில நாட்களில் அந்த இடைவெளி நீக்கப்பட வேண்டும் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு சேர்த்து விட்டோம்! செயல்படுத்த விண்ணப்பிக்கிறோம்!**

**(அதன் பிறகு தான் அந்த பதிவு ஆவணங்கள் நமக்கு கிடைக்கும்)**

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to:

## DEEPAM TRUST

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

**வங்கி பரிமாற்ற தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.**

**இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும்
சிறந்தவல் லபம்உறு திருவருள் மருந்தே (1328)**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் கலந்து கொண்ட முக்கிய சன்மார்க்க சான்றோர்கள்














**உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்**
**அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே (1322)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12 ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா**



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் 12ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் சொற்பொழிவாற்றிய வேலூர் **தேன்மொழி தமிழ்சோலை** அம்மாவுக்கு அருள்ஜோதி அன்னாலயத்தின் அன்னை நினைவு பரிசு வழங்குதல்.

# அடுத்த மாத சன்மார்க்க சொற்பொழிவு

**21**

## நித்ய தீப தருமச்சாலையில்

**மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம்** (சொற்பொழிவு)



நாள் : 5.10.2019 (சனிக்கிழமை) / நேரம் : மாலை 6.00 மணி முதல்

தலைப்பு : **"கடவுள் ஒருவரே"**

சொற்பொழிவாளர் : சன்மார்க்கத்தின் மூத்த சான்றோர், ஜீவகாருண்ய செம்மல்
தயவுமிகு **சாது சந்தானம்** அவர்கள்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், கொளப்பாக்கம்.

இடம் : **நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி,
சென்னை - 600 042.
செல் : 9444073635 / 22442515 / 9789494009

குறிப்பு : கடந்த மாதம் ஜீவகாருண்ய எழுச்சி பெருவிழா காரணமாக சொற்பொழிவு நடைபெறவில்லை. சிரமத்திற்கு வருந்துகிறோம்.

**சித்திக்கு மூலமாம் சிவமருந்து எனஉளம்**
**தித்திக்கும் ஞானத் திருவருள் மருந்தே (1324)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 40. சித்திநிலைக்கு ஆகரம்

79. சேகர மாம்பல சித்தி நிலைக்கெலாம்
80. ஆகர மாஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ–வி.) ஒன்றான பேரருட்பெருஞ் சக்தியிலிருந்துதான் இந்த மகாபிரபஞ்சத்து எவ்வுயிரும். எப்பொருளும், எச்செயலும், விளைவும் உண்டாகின்றனவாம். இப்பெருஞ் சக்தியின் விரிநிலை யாவும், பொருட்சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, யோகசக்தி, அருட்சக்தி என்பவற்றில் அடங்கும். விரிவுற்ற நிலையில் வெளிப்பட்டு விளங்கவல்ல இவையாவும் அதிசூக்குமமாய் நுணுகிக் குவிந்து அருகிக்கிடக்கும் நிலை தான் நமது அருட்பெருஞ்ஜோதிச் சிற்றம்பலமாம். ஆகையால், இந்தச் சிற்சபையைத்தான் இங்கு ஆகரம் என்கின்றார் நம் அருட்பிரகாச வள்ளற்பிரான். ஆகரம் என்றால், சுரங்கம், உறைவிடம், இரகசிய வைப்பிடம் (Secret Treasure House) எனப் பொருள்படும். முத்து, மணி முதலியன உடைய ஆழ்கடலை இரத்தினாகரம் என்பர். இதுபோல் நம் அருட்சிற்றம்பலம் இருக்கிறதே இது, அஷ்ட ஐஸ்வரியம் என்னும் அஷ்டமா சித்திகளுக்கும், அளவுகடந்த அருட்பெருஞ்ஜோதி சித்திக்கும் உறைவிடமாய் இருக்கின்றது உண்மையாம்.

சேகரம் என்ற சொல். சேகரித்து வைக்கப்பட்ட பொருள். ஆற்றல், சத்து இயல் முதலியனவாகும். பெரும்பொருளை எல்லாம் சம்பாதித்துத் திரட்டி ஓர் இரகசிய அறையில் மறைவாக வைத்துக் காத்து வருகின்றனர் உலகர். கடவுளோ இந்தப் பேருலகப் பேராற்றல்களை எல்லாம் தன் அருள் வல்லபத்தால் சிற்றணுவாகிய அம்பலத்திலே முழுமையாகவே வைத்து, நமக்கே வழங்க உள்ளார். நம்பதி தமக்கென எதுவும் வேண்டாத் தனிப்பெருந் தியாகேசரல்லவா? ஆகையால், நாமும் தயவுடையவர்களாகிச் சுத்த சன்மார்க்கத்தால் அந்த அருட்ஜோதி அம்பலத்தை உறைவிடமாகக் கொண்டுவிட்டால், அங்குள்ள சேகரப் பொருளெல்லாம் நம் கரங்கொடுத்து நலமே வாழச் செய்வார்.

இறையருளின் ஆற்றலை நிறையருள்நிலை நின்று காணாத யோக ஞான சித்தர்கள், அம்பலவாழ்வு கொண்டிலங்காது. இவ்வுலக வாழ்வில் பலரும் வியக்கச் சில காலம் சித்தாடி மகிழ்ந்து, மகா சமாதியுற்று கடவுட்ஜோதியில் மறைந்துவிட்டனர். ஆன்மாவாகிய ஆகரத்தில் சேகரமாய் வைக்கப்பட்டுள்ள நிறையருட் செல்வத்தில் ஓரளவைப் பெற்றுப் புறத்தாய் சித்தர் குழாம் அருள் இறையோடு பிரிவற இருந்து ஆனந்த வாழ்வில் நிலவாது போயினர். ஏனென்றால் அப்படி வாழவைக்கும் சுத்த சன்மார்க்கம் ஒன்று அன்று வெளிப்படவில்லை என்பதே காரணம். இன்றோ சுத்த நெறியால் நம்மை நாம் அருளிறையோடிருக்கக் கண்டு, அகங்காரபோதம் அற்று அருள்மயமாய் விளங்க உள்ளோம். இப்போது நமக்கு உலகியலில் சித்து செய்திருப்பது திருவருட் சம்மதமல்ல. எல்லோரும் சுத்த சன்மார்க்கிகளாய் ஆகி நிறையின்பில் வாழ வகை செய்வதே நம் கடமையும் ஆண்டவர் ஆணையுமாகும். எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதிபதியோடு ஒன்றி நின்று. அருள் அற்புதத்தால் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை வாழ்வை வெளிப்படுத்துவோம். நம்பதியும் அவர்தம் அருட்பேராற்றலும் நித்தியமே: ஆதலின் அவரோடுறையும் நாமும் நித்த மகிழ்ந்து வாழலாம்.

**மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு**
**கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே (1328)**

# புதியதோர் உலகு

செய்வோம்! செய்தே ஆகவேண்டும்! துவங்கிடுவோம் துரிதமாக! புதுமைகள் நிறைந்த உலகு என புரிந்து கொள்ளாதீர்கள். பழைமைகளை புதுமை மிளிரச் செய்திடும் உலகு. நாள்தோறும் புதுமைகள் நிகழ்ந்தவண்ணம் உள்ளதே! என்று வெகு சிலர், பழைமைகள் தான் புனிதமானவை என்று நம்பிக்கொண்டிருக்கும் நல்லவர் சிலர் பெருமிதப்பட்டுக் கொள்ளலாம். இன்றைய உலகின் புதுமைகள் சிலவற்றை சிந்திப்போம். மனிதன் விலங்குகளை வேட்டையாடி, காட்டுமிராண்டியாக வாழ்ந்தான் என்று படித்திருக்கிறோம். இன்று ஏதாவது வித்தியாசமாக நடந்து கொள்கிறானா?? விலங்குகளுக்கு பதில் தன் சகமனிதனையே அல்லவா வேட்டையாடிக் கொண்டிருக்கிறான்.

நாட்டை பாதுகாக்கிறானாம். மதங்களைப் பாதுகாக்கிறானாம். மதத்தை பரப்புகிறானாம். தேசப்பற்றாம். தாய்நாடாம்? எல்லை பாதுகாப்பாம்! இரவு பகலாக காவல்! கோடிக்கணக்காக விரயமாவதுகூட பொருட்டல்ல. விலைமதிப்பற்ற உயிர்களைப் பறிகொடுக்கிறோமே. இதுவா புதுமை??

நாகரிகத்தின் உச்சியை நோக்கி பயணிக்க வேண்டிய மனிதன், தன்னைப் போன்ற மனிதனை அழித்திட, பேரழிவை நிரந்தரமாக செய்திடவல்ல அணுஆயுதங்களை தயாரித்து, நான் தான் வல்லரசு என்று பிரகடனப்படுத்தி, உயரே பறந்து, உச்சி மகாநாடுகள் நடத்தி, ஆலங்கனம் செய்துகொண்டு, அமைதிப்பரிசு பெற்றிட அவாவும் தலைவர்களை அல்லவா உலகம் பெற்றுள்ளது. இவைகள்தான் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் புதுமைகள்.

நாம் அமைக்க விரும்பும் “புதியதோர் உலகம்” எப்படி இருக்கும் என அறிய விரும்புகிறீர்கள் அல்லவா. சுருங்கச் சொல்லி ஒவ்வொன்றாக விளக்கிடவும் விரும்புகிறேன். முதலில் புதியதோர் உலகம் ஏன்? எப்படி அமைத்திட இயலும்? எப்போது அமைந்திடும்? ஏன் புதியதோர் உலகு? இன்றைய உலகு, எதையுமே சரியாகப் புரிந்து கொள்ளும் உலகு, “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” இந்த வாசகத்தை, இந்தக் கருத்தை எல்லா ஞானிகளும் ஏற்கிறார்கள் சிலரைத் தவிர. இது உலகர் அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்டதா? குறிப்பாக நாம் புரிந்து கொண்டு செயல்படுகிறோமா? ஏறத்தாழ 3000 தெய்வங்கள். வருடம் முழுமையும் வழிபாடு. வழிபாடுகளில் எத்தனை எத்தனை வேறுபாடுகள்?

மனிதனின் இலக்கு தான் எது? புரிந்து கொள்ளப்பட்டதா? இறைவன் திருவடி நிழலில் நிரந்தரமாக ஐக்கமடைதல் என்று மதநூல்கள் போதிக்கின்றன. உண்மையிலேயே இந்த முயற்சியில் தான் ஈடுபட்டிருக்கிறானா? திக்கு தெரியாமல் தவித்த மனிதனுக்கு வழிகாட்ட முதலில் முளைத்தது வேதமதம். வேதங்கள் – உபநிஷதங்கள். தர்ம சாஸ்திரங்கள்.

அகம் பிரம்மாஸ்மி – தத்வமஸி – புரிந்துகொண்டோமா? புரிந்தவர்கள் ஏன் கருத்தில் பிழை இருப்பின் தவறாமல் – தயங்காமல் என்னை திருத்துங்கள். உள்ளே இருக்கும் இறைவனை வெளியே தேடுவது படிப்படியாக குறைந்தால் தானே மனிதன் முழுமையடைகிறான் – தூய்மை பெறுகிறான். இறைவனை நெருங்குகிறான் என்று திருப்தியடையலாம். அகத்தூய்மை பெறுவதை அறவே மறந்து, எண்ணிய எண்ணியாங்கு எய்திட என்றால் இயலும் என்று நம்பி திண்ணிய மனம் பெறும் – உறுதிகொண்ட நெஞ்சு பெறும் முயற்சி மேற்கொள்ளாமல், எந்தக் கடவுள் எந்த இடர்பாடுகளை களைவார். என்ன பூஜை செய்தால் – என்ன பரிகாரம் செய்தால், உடனடி தீர்வு கிடைக்கும் என்றே தன்னம்பிக்கையை இழந்து தவிக்கிறானே மனிதன். இத்தகு உலகு புதுமை பெறவேண்டாமா? வேத மதத்தை தொடர்ந்தது சமணம் – பௌத்தம் – இவை இரண்டின் சாயல்களில் கிறிஸ்துவம் பிறகு இஸ்லாம்.

முழுமையாக மதநூல்கள், அத்தனையும் அறிந்திடும் அறிவும், திறனும் இல்லாதவன் என்னும் ஓதி உணர்ந்தவர்களின் நூல்கள் சிலவற்றையேனும் ஊன்றிப் படித்துள்ளேன்.

**நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரும்**
**உரைதரு பெருஞ்சீர் உடையநன் மருந்தே (1330)**

மனிதனை அடுத்த நிலைக்கு உயர்த்த வந்த மதம். தன்னுள்ளே பிளவுபட்டது. எல்லா மதங்களிலும் உட்பிரிவுகள். ஷியா, சுன்னி இஸ்லாத்தில் இரு பெரும்பிரிவுகள். சுபி ஒரு தனி பிரிவு. மஹாயானா, ஹீனயானா ஜென் - பௌத்தத்தில் பிரிவுகள். சமணத்தில் மிகைப்பற்றாளர், மிதப்பற்றாளர்கள். அனுஷ்டானங்களில் தீவிரம் - மிதம். சைவத்தில் பிரிவுகள். வைணவத்தில் பிரிவுகள்.

கிருஸ்துவத்தில் கத்தோலிக்கர், பிராடஸ்டென்ட், பெந்தகோஸ்தலர். இன்னும் அதிலே, எந்த வகுப்பிலிருந்து வந்தார்களோ அந்த வகுப்பின் பெயரை விடாமல் தொடர்பவர்கள்.

ஒரே ஒரு இறைவனை நாம் புரிந்து கொண்டவிதம்! சற்று சிந்தியுங்கள். இலக்கை அடைந்திட திடசித்தம் - விடாமுயற்சி தன்னம்பிக்கை இவைதானே தேவை. இவைகள் இந்தப் பிரிவுகளினாலும், பிணக்குகளினாலும், வாதப் பிரதிவாதங்களாலும் கிடைத்திடுமா? நூற்றாண்டுகளாக மனிதன் பின்னோக்கி செல்லும் காரணம் இதுவாகத்தான் இருக்கும்! அட்டமாசித்திகள் பெற்ற அபூர்வ மனிதர்கள் இருந்திருக்கலாம்! இப்போதும் இருக்கலாம். மலைக்குகைகளிலோ, அடர்ந்த வனங்களிலோ அல்லது நம்மிடையே இருந்து கொண்டு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாமலே வாழ்ந்து வரலாம்.

தெளிவின்றி திகைக்கின்றேன். எனது வியப்பும் - குழப்பமும்?? இவர்களால் சித்தம் தூய்மைப்படுத்தப்பட்டவர்கள் எங்கே? அவர்கள் ஒன்று பத்தாகி, பத்து - நூறாகி, ஆயிரம் பல்லாயிரமாகப் பெருகி இருக்கவேண்டுமே மக்கள் தொகை பெருகிவிட்டது.

மந்தை மனப்பாங்கும் பெருகியுள்ளது. இதுதான் இன்றைய நிதர்சனம். மன்னிக்கவும். சிந்தியுங்கள். மந்தை மனப்பாங்கு - ஒரு உண்மை நிகழ்வு - எகிப்து நாட்டில் இருபது ஆண்டுகட்கு முன்பு நிகழ்ந்த ஒரு சம்பவம். ஆடு மேய்ப்பவர் சிலர் தங்கள் ஆடுகளை, பசுமை மிக்க வெளியில் மேய்ப்பிப்பது எங்கும், எப்போதும் இருக்கின்ற நடைமுறை. இந்த நிகழ்ச்சி நடந்த இடம் ஒரு மலைப்பாங்கான பரந்தவெளி.

ஏறக்குறைய 1500 ஆடுகள் மேய்ந்து முடித்து அன்றாடம் தங்கள் தங்கள் மேய்ப்பனோடு தங்கள் தங்குமிடம் சேர்வது வழக்கமானது. ஒருநாள், ஒரு ஆடு வழிதவறி மலைமுகட்டின் விளிம்பில் நின்று அலறியது. மேய்ப்பவன் இது கண்டு அதிர்ச்சியடைந்து அழைப்புக்குரல் கொடுத்தான். ஆனால் அந்த ஆடு மலைமுகட்டின் விளிம்பிலிருந்து தவறி கீழே 300 அடி பள்ளத்தில் விழுந்தது. ஒன்றன்பின் ஒன்றாக, அந்த மந்தையில் அன்று மேய்ச்சலுக்கு வந்திருந்த 1500 ஆடுகளும் மலைமுகட்டிலிருந்து பள்ளத்தில் விழுந்து மாண்டன. இவைகளைக் காப்பாற்ற மேய்ப்பவர்கள் எடுத்த முயற்சி பலன் தரவில்லை. இது கற்பனைக்கதை அல்ல. இதுதான் இன்றைய மக்களிடையே காணப்படுகின்ற மந்தை மனப்பாங்கு.

ஏன் செய்கிறோம், எப்படி செய்தால் எளிதாக இருக்கும்? அனைவரும் நற்பயன்கள் அடைவதல்லவா நமது நோக்கம்? என்ற கோணங்களில் சிந்திப்போர் சிலராக இருப்பதுதான் உண்மை.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னரே, பாரதி, தனது நூலான பாஞ்சாலி சபதத்தில், சூதாட்டச்சறுக்கத்தில் எழுதினான்.

நாட்டு மாந்தெரெல்லாம் நரர்களென்று கருதார் ஆட்டு மந்தையாமென்று உலகை அரசர் எண்ணிவிட்டார் அந்த அரசர். இன்றும் நம்மால் போற்றப்படுகிற பாரத தர்மர், இன்றும் நிலைமை பெரிதும் மாறிவிடவில்லை என்பதுதான் வியப்பு!!

யாதும் ஊரே - யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா

புறநானூற்று வரிகள் படித்திருக்கிறோம். ஆனால் பயன்படுத்துகிறோமா? அலெக்ஸாண்டர் படையெடுப்பிலிருந்து, ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பு வரை. 56 தேசங்களாக பிரிந்து வாழ்ந்தவர்கள்தான். போரிட்டு வாழ்ந்தவர்கள்தான்.

**என்றே என்னினும் இளமையோடு இருக்க**
**நன்றே தரும் ஒரு ஞானமா மருந்தே (1332)**

பொதுநலம் புரியாதவர்கள்தான், பண்டிதர்களாக வாழ்ந்து புராண உபன்யாசம் செய்தோம்!!

மனிதன் இன்று வரை சுயநலமியாகத்தான் இருக்கிறான். நேர்த்திக்கடன் - பிரார்த்தனை வழிபாடு - சகுனம்பார்த்தல் - ஜோதிடம் பார்த்தல் - எண்கணிதம் - கைரேகை இவையெல்லாம் தன் சுபிக்ஷம் கருதியா அல்லது சமுதாய நலன் கருதியா?

தீதும் நன்றும் பிறர்தர வாரா என மனிதன் இன்னும் புரிந்து கொள்ள மறுக்கிறான்? தன் மீது நம்பிக்கை - தன் வலிமை உணர்தல் எப்போது பெறுவான்?

## ஆலயங்கள் - சக்தி நிலையங்கள் (Power House)

ஓராண்டிற்கு முன்பு, ஆலயம் தொழுதல் சாலவும் நன்று எனும் தலைப்பில் இதுபற்றி எழுதியிருந்தேன்.

ஆலயம், அமைதியும், அகத்தூய்மையும் தரவல்ல ஒருநிலையமாக விளங்கும் - விளங்கவேண்டும் என்ற நோக்கில்தான் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் இரண்டாம் வகுப்பில் படித்தது அல்லவா? இதனுடைய நுட்பமான கருத்து மனிதன் சோர்வடையும்போது/ புத்துயிர் - புத்துணர்வு பெற அருளிறையை அணுக தனக்கு வேண்டிய மனத்தூய்மையையும், தன்னம்பிக்கையையும் பெற்றுத்திரும்புவது. இன்றைய வழக்கில் சொல்லவேண்டுமானால் **Re-charge** செய்து கொள்வது.

ஆனால். **Recharge** புத்துணர்வு பெற வேறு ஓர் இடம் வரவேற்பளிக்கின்றது. அங்கல்லவா தவறாமல் விஜயம் செய்கிறான் இன்றைய குடி மகன். இத்தகு உலகு விரும்பத்தக்கதா?

ஆலயங்கள் இன்று வணிகவளாகங்களாக மாற்றப்படுகின்றன. இதை நான் சொல்லவில்லை. அண்மையில் மறைந்த காஞ்சிப்பெரியவர் தனது அருளுரைகள் மூலம் வற்புறுத்தினார். வருந்தினார்.

பணம் பாதாளம் வரை பாயும் என்று நம்புகிற மனிதன் பணத்தை புரிந்துகொண்டானா?


பண்டமாற்று செய்து பகிர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த பண்டைய மனிதன், பண்டமாற்றுமுறையை, சீர்திருத்த - எளிதாக்க - பகிர்தலில் நேர்மையை கடைபிடிக்க கண்டுபிடிக்கப்பட்டதுதான் பணம், நல்லெண்ண அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட பணம். இன்று கறுப்புப்பணமாக உருமாறி மனிதனின் அகத்தை கறுப்பாக்கிவிட்டது. ஆனால் புறத்தே வெறுப்பாய் இளித்துத் திரிகிறான்.

பகிர்தலில் முதலில் முளைத்த சீர்கேட்டிற்கு அடிப்படைக் காரணத்தை ஆய்வு செய்தால்/ அது நம்மை நாலு வர்ண தர்ம சாஸ்திரங்களைச் சுட்டிக்காட்டும்.

இத்தகு எண்ணங்களோடு குழம்பித் தவித்த என் அகத்தே பளிச்சிட்டது வள்ளலார் அருளிய ஓர் அருட்பா -

மதம் என்றும் சமயம்என்றும் சாத்திரங்கள்என்றும்
மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள்வாழும்
பதம் என்றும் பதம் அடைந்த பக்தர் அனுபவிக்கப்
பட்ட அனுபவங்கள் என்றும் பற்பலவா விரிந்த
விதம் ஒன்றும் தெரியாதே மயங்கிய என்தனக்கே
வெட்ட வெளியா அறிவித்திட்ட அருளிறையே!
சதம் என்றும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தன்நடஞ் செய் அரசே என்சாற்றும் அணிந்தருளே!

வள்ளலாரை நன்கு புரிந்து கொள்வோம். அடுத்த இதழில் புதியதோர் உலகை அறிமுகப்படுத்தி, புதிய உலகு அமைத்திடல் சாத்தியமா? எனும் வினாவிற்கு விடையும், எப்படி இயலும், எப்போது அமையும்/எனும் விவரங்களடங்கிய என் சாற்றும் படித்தருளுங்கள்.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

**மலப்பிணி தவிர்த்தருள் வலம்தரு கின்றதோர்**
**நலத்தகை அதுவென நாட்டிய மருந்தே (1334)**

# தீபத்திற்கு மணிமகுடம் சூட்டிய
# 12-ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழா



தீபம் அறக்கட்டளையின் ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் **தவத்திரு. சைவமணியார்** அவர்களின் தெய்வீகமான பேருரை.



ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவிற்கு வருகை தந்த மு.க.ஸ்டாலின் அவர்களின் மைத்துனரும், வள்ளல் நேசருமான தயவுமிகு. **ஜெய. ராஜமூர்த்தி** அவர்களுக்கு பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்பு.



ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவிற்கு வருகை தந்த கலைமாமணி பத்மஸ்ரீ, **டாக்டர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்** மற்றும் **டாக்டர் நவநீதகிருஷ்ணன்** ஆகியோரை வரவேற்று மகிழும் தீபம் அறக்கட்டளையின் நிறுவனர் திரு. பாலகிருஷ்ணன், ஜோதி சதுரகிரியார் மற்றும் திருமதி. மொழியரசி அசோகன்,

RNI : TNTAM / 2010 / 35284 "REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019 R.No.TN/CC(S)Dn/412/17-19

Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.

**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor :** M. Balakrishnan



## கிராமிய குயிலின் சன்மார்க்க உரை

தீபம் அறக்கட்டளையின் சார்பில் 12–ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் உலகளாவிய கிராமிய நாட்டுப்புறக் கலைகளின் பேரொளி கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டர் **விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன்** அவர்களின் பேருரை.

## வள்ளல் நேசரின் ஆனந்த உரை

தீபம் அறக்கட்டளையின் சார்பில் 12–ம் ஆண்டு ஜீவகாருண்ய எழுச்சிப் பெருவிழாவில் திருவெண்காடு வள்ளலார் தமிழ் மன்றத்தின் நிறுவனரும், சன்மார்க்க தமிழறிஞர் டாக்டர் **ஜெய. ராஜமூர்த்தி** அவர்களின் பேருரை.



If undelivered Please Return to:

**DEEPAM TRUST**

(REDG. No. - 2035/07)

#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.org
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-09-2019
Egmore, Chennai - 8